சென்னை மெட்ரோ ரெயில் திட்டம்:

# ரூ.449 கோடியில், 104 கிலோ மீட்டர் நீளமுள்ள தண்டவாளம்

## 3 தனியார் நிறுவனங்களுடன் ஒப்பந்தம்

சென்னை, ஜன.22– சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் ரெயில் தண்டவாளங்களை அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கி உள்ளது.

**ரூ.449 கோடியில்**

இது குறித்து, சென்னை மெட்ரோ ரெயில் திட்ட பொது மேலாளர் (மக்கள் தொடர்பு) எஸ்.கிருஷ்ண மூர்த்தி வெளியிட்டு உள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:–

சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்துக்கு உயர்த்தப்பட்ட வழித்தடங்கள், சுரங்க வழித்தடங்கள் மற்றும் டிப்போ ஆகிய வழித்தடங்களில் தண்டவாளங்கள் அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் லார்சன் அண்டு டூப்ரோ நிறுவனம், சென்னை மற்றும் ஆல்ஸ்டாம் டிரான்ஸ்போர்ட் எஸ்.ஏ மற்றும் புராஜக்ட்ஸ் இந்தியா நிறுவன கூட்டு முயற்சி நிறுவனங்களுக்கு 449 கோடியே 22 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்பட்டு உள்ளது.

**104 கிலோ மீட்டருக்கு தண்டவாளம்**

இதன்படி ஒப்பந்தக்காரர்கள், ரெயில் செல்லும் பாதைகள், சுரங்கம் மற்றும் டிப்போவில் தண்டவாளங்களை வடிவமைத்துக் கட்டித்தர வேண்டும். இந்த ஒப்பந்தத்தின்படி, 104 கிலோ மீட்டர் நீளமுள்ள தண்டவாளங்கள் அமைக்கப்படும்.

இதில் 15 கிலோ மீட்டர் நீளமுள்ள தண்டவாளப்பணியும் உள்ளடங்கும். தண்டவாளங்கள் அமைக்கும் பணிகள் நான்கு வருடங்களில் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு எஸ்.கிருஷ்ண மூர்த்தி கூறி உள்ளார்.